**சுருக்கம்**

உயர்கல்வி – கல்லூரிக் கல்வி – திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இருபாலர்) – 2011-2012 ஆம் கல்வியாண்டு முதல் தொடங்குதல் – ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜி1) துறை

அரசாணை (நிலை) எண்.164 நாள் 15.7.2011.

ஆனி 30

திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்கப்பட்டவை:–

1. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவரின் ந.க.ஆ3–18044–2011, நாள் 16.6.2011 மற்றும் 13.7.2011.
2. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித எண்.21993/க்யூ2/2011, நாள் 29.6.2011.

---------

**ஆணை:–**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள ஸ்ரீரங்கம் வட்டம், ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் மாணவ மாணவியர்களின் வசதிக்காக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்திட வேண்டும் என்ற பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றிடும் பொருட்டு, அரசால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் கல்லூரிக்கல்வி இயக்குநர் ஆகியோர்களின் அறிக்கை கோரப்பட்டது. இதனைத் தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஸ்ரீரங்கம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியினை நாவலூர் குட்டப்பட்டு, வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் நிரந்தரமாக தொடங்கலாம் என்றும், அதற்கான கட்டுமானப் பணிகள் முடிவுறும் வரையில் கல்லூரியினை இனாம்குளத்தூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் தற்காலிகமாக தொடங்கலாம் என தெரிவித்துள்ளார்.

2. கல்லூரிக் கல்வி இயக்குநர் பார்வையிரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டத்தில், 2011–12ம் கல்வியாண்டில் கலை மற்றும் அறிவியல் கல்லூரியினை தொடங்கி நடத்துவதற்கு ஏதுவாக கீழ்க்கண்டவாறு அரசின் ஒப்பளிப்பினை கோரியுள்ளார்:-

**அ.) <u>பாடப்பிரிவுகளின் விவரம்</u>**

i) இளங்கலை ஆங்கிலம் (B.A. English)
ii) இளமறிவியல் கணினி அறிவியல், (B.Sc. Computer Science)
iii) இளநிலை வணிகவியல் (B.Com)
iv) இளமறிவியல் கணிதம் (B.Sc Maths)

…2

ஆ) **<u>தேவைப்படும் பணியிடங்கள்:-</u>**

**ஆசிரியர் பணியிடங்கள்:-**

| வ.எண். | பணியிடங்களின் விவரம் | சம்பள விகிதம் ரூ. | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | முதல்வர் | ரூ.37,400 – ரூ.67,000+AGP ரூ.10,000+சிறப்புப்படி ரூ.2,000/– | 01 |
| 2. | உதவிப்பேராசிரியர்கள் | ரூ.15,600–39,100+AGP ரூ.6000 | 08 |
| 3. | மொழி பாடங்களுக்காக உதவிப்பேராசிரியர்கள் | ரூ.15,600–39,100+AGP ரூ.6000 | 02 |
| 4. | உடற்கல்வி இயக்குநர் | ரூ.15,600–39,100+AGP ரூ.6000 | 01 |
| 5. | நூலகர் | ரூ.15,600–39,100+AGP ரூ.6000 | 01 |
| | மொத்தம் | | 13 |

**<u>ஆசிரியரல்லாத பணியிடங்கள்:-</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | நிதியாளர் | ரூ.15,600–39,100+ GP ரூ.5400 | 01 |
| 2. | கண்காணிப்பாளர் | ரூ.9,300–34,800+ GP ரூ.4800 | 01 |
| 3. | உதவியாளர் | ரூ.5,200–20,200+ GP ரூ.2200 | 02 |
| 4. | இளநிலை உதவியாளர் | ரூ.5,200–20,200+ GP ரூ.2000 | 02 |
| 5. | கணினி இயக்குபவர் | ரூ.9,300–34,800+ GP ரூ.4200 | 01 |
| 6. | நூலக உதவியாளர் | ரூ.4,800–10,000+ GP ரூ.1800 | 01 |
| 7. | இரவு காவலர் | ரூ.4,800–10,000+ GP ரூ.1300 | 02 |
| 8. | அலுவலக உதவியாளர் | ரூ.4,800–10,000+ GP ரூ.1300 | 02 |
| 9. | துப்புரவாளர் | ரூ.4,800–10,000+ GP ரூ.1300 | 01 |
| 10. | பெருக்குபவர் | ரூ.4,800–10,000+ GP ரூ.1300 | 04 |
| | மொத்தம் | | 17 |
| | | பெரு மொத்தம் | 30 |

இ) மேற்படி கல்லூரிக்கான தொடரும் மற்றும் தொடரா செலவின விவரங்களை கீழ்வருமாறு:-

i) **<u>தொடரா செலவினம்</u>**

| | | |
|---|---|---|
| 1. | கல்லூரிக்கு புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு | ரூ.4,00,00,000/– (ரூபாய் நான்கு கோடி மட்டும்) |
| 2. | மரத்தளவாடங்கள் | ரூ.5,00,000/– (ஐந்து இலட்சம் மட்டும்) |
| 3. | புத்தகம் மற்றும் பருவ இதழ்கள், நாளிதழ்கள் | ரூ.10,00,000/– (பத்து இலட்சம் மட்டும்) |
| 4. | இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் | ரூ.5,00,000/– (ஐந்து இலட்சம் மட்டும்) |
| 5. | கணிப்பொறிகள் (25 எண்ணிக்கை) மற்றும் சார்ந்த உபகரணங்கள் | ரூ.8,95,000/– (எட்டு இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்) |
| | மொத்தம் | ரூ.4,28,95,000/– |

ii) **<u>தொடரும் செலவினம் (ஆண்டொன்றுக்கு):-</u>**

| | | |
|---|---|---|
| 1. | பணியாளர் செலவுகள் | ரூ.84,07,800 |
| 2. | அலுவலகச் செலவுகள் | ரூ. 50,000 |
| | மொத்தம் | ரூ.84,57,800 |

3. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர், மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் ஆகியோர்களின் பரிந்துரையினை அரசு கவனமுடன் பரிசீலித்து, திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டத்தில், பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை (இருபாலர்) தொடங்கலாம் என முடிவு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:-

i. திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை (இருபாலர்) 2011-2012ம் கல்வியாண்டு முதல் தொடங்கிடவும் மற்றும் கல்லூரிக்கான நிரந்தர இடம் ஒதுக்கீடு செய்யப்படும் வரை அதனை தற்காலிகமாக இனாம்குளத்தூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடத்திடவும் நிர்வாக ஒப்பளிப்பு அளிக்கப்படுகிறது.

ii. இக்கல்லூரியில் இளங்கலை ஆங்கிலம் (B.A. English). இளமறிவியல் கணினி அறிவியல், (B.Sc Computer Science) இளம்நிலை வணிகவியல் (B.Com) மற்றும் இளமறிவியல் கணிதம் (B.Sc Maths) ஆகிய நான்கு பாடப்பிரிவுகளை தொடங்கிட அனுமதி அளிக்கப்படுகிறது.

iii. இக்கல்லூரிக்கு ரூ.4 கோடி மதிப்பீட்டில் கட்டடம் கட்டுவதற்கு நிருவாக ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

iv. தொடரா செலவினமாக, மரத்தளவாடங்கள் வாங்கிட ரூ.5 இலட்சம், புத்தகம் மற்றும் பருவ நாளிதழ்கள் வாங்கிட ரூ.5 இலட்சம், இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் வாங்கிட ரூ.5 இலட்சம், 25 கணிப்பொறிகள் மற்றும் சார்ந்த உபகரணங்கள் வாங்கிட ரூ.8.95 இலட்சம் ஆக மொத்தம் ரூ.23.95 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

v. மேலே பத்தி 2 (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியிடங்கள் ஆண்டொன்றிற்கு ரூ.84.08 இலட்சம் தொடர் செலவில் ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

vi. அலுவலகச் செலவிற்கு ஆண்டொன்றிற்கு ரூ.50,000 ஒப்பளிப்பு செய்யப் படுகிறது.

vii. கல்லூரிக்கான தொடர் செலவினம் முதல் ஐந்தாண்டுகளுக்கு மட்டும் அரசால் ஏற்றுக்கொள்ளப்படும். ஐந்தாண்டுகளுக்குப்பின் சம்பந்தப்பட்ட திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் அச்செலவினம் ஏற்றுக்கொள்ளப்படும்.

4. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கோரிக்கை எண்.20. உயர்கல்வித்துறையின் கீழ் புதிதாக துவக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்படும்:-

2202 பொதுக்கல்வி – 03. பல்கலைக்கழகக் கல்வியும் உயர்கல்வியும் – 102. பல்கலைக்கழகங்களுக்கு நிதிஉதவி – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத்திட்டம் – JT. பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி – 09. உதவித் தொகைகள் 01 நடப்புச் செலவுக்கான உதவித் தொகைகள்.
(த.தொ.கு. 2202 03 102 JT 091)
02. மூலதனச் செலவுக்கான உதவித் தொகை
(2202 03 102 092)

**5.** இப்புதிய கணக்கு தலைப்பிற்கு இயக்குநர், கல்லூரிக் கல்வி அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு பற்று கட்டுப்பாட்டு அதிகாரியாவார். சம்பந்தப்பட்ட கருவூல கணக்கு அலுவலர் தங்களது கணக்குகளில், இப்புதிய கணக்கு தலைப்பினை துவங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**6.** மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் ஒரு புதுப்பணி குறித்த செலவாக கருதப்பட்டு சட்டப்பேரவையின் ஒப்புதல் பெறப்படும். அவ்வாறு ஒப்புதல் பெறப்படும்வரை இச்செலவினம் முதற்கண் தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியின் முன்பணம் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்திற்கான ஒப்பளிப்பு ஆணை இவ்வாணையின் படியுடன் பெறப்படும் கல்லூரிக் கல்வி இயக்குநரின் விண்ணப்பத்தின் அடிப்படையில், நிதி (வ.செ.பொ.I) துறையால் வெளியிடப்படும்.

**7.** மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள கல்லூரிக்கான உடனடி செலவினை நிர்ணயித்து அதற்கான எதிர்பாரா செலவு நிதி முன்பணத்தை பெற்று அதனை பாரதிதாசன் பல்கலைக்கழகப் பதிவாளருக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**8.** மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளகல்லூரியை தொடங்கி நடத்துவதற்கான செலவினை மேற்கொண்டு அதற்கான பயன்பாட்டுச் சான்றிதழ்களை கல்லூரிக் கல்வி இயக்குநருக்கும், அரசுக்கும் அனுப்பி வைக்குமாறு பாரதிதாசன் பல்கலைக்கழகப் பதிவாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**9.** இக்கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பது குறித்து உரிய நடவடிக்கை மேற்கொண்டு அதற்கான கருத்துருவினை அரசுக்கு அனுப்புமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகப்பதிவாளர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**10.** இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.**117**/DS(KM) Edn-I/11, நாள் **15.7.2011**–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.**249** (இருநூற்று நாற்பத்து ஒன்பது).

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா.கண்ணன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
பதிவாளர், பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி.
சம்பந்தப்பட்ட மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,
(கல்லூரிக்கல்வி இயக்குநர் வழியாக)
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை 18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாவட்ட கருவூல அலுவலர், திருச்சிராப்பள்ளி.
நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
உயர்கல்வித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (கல்வி .I / வ.செ.பொது. I / வ.செ.பொது. II) துறை, சென்னை-9.
உயர்கல்வி (ஏ, டி, எப், எச்) துறை, சென்னை -9.
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.